## வகுப்பு - 10

## இயல் - 5

# மொழிபெயர்ப்புக் கல்வி

**(உரைநடை உலகம்)**

### குறுவினா

**1. மொழிபெயர்ப்பு பற்றி மணவை முஸ்தபா கருத்து யாது?**

*"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.*

**2. மு.கு ஜகந்நாத ராஜா அவர்கள் மொழிபெயர்ப்பு பற்றி கூறுவது என்ன?**

*"ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும்: உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழி பெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு.ஜகந்நாத ராஜா.*

### சிறுவினா

**1. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

*ஐ.நா. அவைகளில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Head phone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.*

**இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

***வினாக்கள்:***

1) *ஐ. நா. அவையில் காதணிகேட்பி எதற்குப் பயன்படுகிறது?*
2) *ஐ.நா. அவையில் மொழிபெயர்ப்பாளர் பணி என்ன?*
3) *ஐ.நா. அவையில் பேசுவதை எவ்வாறு புரிந்து கொள்ளலாம்?*
4) *மொழிபெயர்ப்பாளர் எங்கே இருப்பார்?*
5) *மொழிபெயர்ப்பு என்றால் என்ன?*

***2. மொழிபெயர்ப்பு கல்வி பற்றியும் பயன்கள் பற்றியும் எழுதுக***

- *மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்*
- *பல அறிவுத்துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக்கொள்ள முடியும்; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தமுடியும்.*
- *வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்.*
- *நாடு, விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன.*
- *அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.*
- *இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகயுள்ளன.*
- *பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.*

***3. பல்துறை வளர்ச்சியின் மொழிபெயர்ப்பின் பங்கு என்ன?***

- *இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது.*
- *மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை.*
- *தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால் தான் வளர்ச்சி பெறுகின்றன.*
- *விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது.*
- *திரைப்படங்கள் தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வேற்று மொழிமாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழி பேசும் மக்களையும் அடைகின்றன.*
- *இதனால் புதுவகையான சிந்தனைகள் மொழிக்கூறுகள் பரவுகின்றன.*

**4. மொழிவளர்ச்சி குறித்து எழுதுக.**

- நல்ல மொழிபெயர்ப்பாளன் சில மொழி மீறல்களைச் செய்வான்.
- புதிய இலக்கண விதிகளின் தேவையை உருவாக்குவான், செய்யுளையே தன் வெளியீட்டு வடிவமாகக் கொண்டிருந்த தமிழ். அச்சு இயந்திரத்தின் வருகையை ஒட்டி மொழிபெயர்ப்பை எதிர்கொண்ட போது உரைநடை வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டியிருந்தது.
- அப்போது தமிழ், ஆங்கிலத் தொடரமைப்புகளையும் கூறுகளையும் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.
- மொழிபெயர்ப்பு இத்தகைய மொழிப் பிரச்சினைகளைக் கடந்து. அதன் தீர்வாக மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

**5. மொழிபெயர்ப்பின் தேவை குறித்து எழுதுக.**

- மொழிபெயர்ப்பு எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று.
- விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின்கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.
- ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழிபெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்து இருக்கின்ற எழுத்தாளர்கள் சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது.
- இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி. தேசிய புத்தக நிறுவனம் தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன.

**நெடுவினா**

***1. மொழிபெயர்ப்பின் பயன்கள் யாவை? (அல்லது) மொழிபெயர்ப்பு ஏன் பயன்கலை என அழைக்கபடுகிறது?***

***மொழிபெயர்ப்பின் துணை:***

- *இது மொழிபெயர்ப்புக் காலம், காலையில் எழுந்தவுடன் நாளிதழ்ப்படிப்பு, மொழிபெயர்ப்பு மூலமே நமக்குச் சாத்தியமாகிறது.*
- *நம் பணிகள் பலவற்றிலும் மொழிபெயர்ப்பின் துணை இருந்துகொண்டே இருக்கிறது.*
- *இன்றைய வளரும் நாடுகளில் அறிவியலை உருவாக்க – அரசியலை உருவாக்க – பொருளியலை உருவாக்க – சமூகவியலை உருவாக்க – இலக்கியத்தை உருவாக்க மொழிபெயர்ப்பே உதவுகிறது.*
- *மொழிபெயர்ப்பு, மனிதர்களையும் நாடுகளையும் காலங்களையும்இணைக்கிற நெடுஞ்சாலையாக இருக்கிறது.*

***அறிவியல் கண்டு பிடிப்புகளும், இலக்கியப் படைப்புகளும்:***

- *மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது.*
- *உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.*
- *கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்களை என்று குறிப்பிடுவார்கள்.*

***2. மொழிபெயர்ப்பின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.***

- *பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.*
- *இலக்கியம் என்பது தன் அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது.*
- *மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது.*
- *ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறிமுகம் ஆன ஷேக்ஸ்பியர். அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.*

***ஆங்கில நூல்களின் அறிமுகம்:***

- *18-ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன.*
- *ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கில வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின.*
- *இதே போலத் தமிழ் நூல்களும் பிற மொழிகளுக்கு அறிமுகமாயின.*
- *தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.*
- *மொழிபெயர்ப்பு இல்லாவிடில் சில படைப்பாளிகளும் கூட உருவாகியிருக்க முடியாது.*
- *ஷேக்ஸ்பியர் இருந்திருக்க முடியாது.*
- *கம்பன் இருந்திருக்க முடியாது.*
- *இரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் அவரே மொழிபெயர்த்த பிறகுதான் நோபல்பரிசு கிடைத்தது.*

## நீதி வெண்பா ( கா.ப. செய்குத்தம்பிப் பாவலர் )

**(கவிதைப்பேழை)**

### குறுவினா

***1. சதாவதானம் என்றால் என்ன?***

*'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண் அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.*

***2. கல்வி பற்றி இலக்கியங்கள் கூறும் கருத்து யாது?***

*கற்றவர் வழி அரசு செல்லும் என்கிறது சங்க இலக்கியம். தொண்டும் அளவு ஊறும் நீர்போலக்கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்கிறது திருக்குறள். கல்வியைப் போற்றுவதைப் புறநானூற்றுக் காலத்திலிருந்து தற்காலம்வரை தொடர்கின்றனர் தமிழர். பூக்களை நாடிச் சென்று தேன் பருகும் வண்டுகலப் போல. நூல்களை நாடிச் சென்று அறிவு பெற வேண்டும்.*

### சிறுவினா

***1. கல்வியை எவ்வாறு போற்றிக் கற்க வேண்டும் என செய்குத்தம்பி பாவலர் கூறுகிறார்?***

- *அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி*
- *மயக்கம் அகற்றி*
- *அறிவுக்குத் தெளிவு தந்து*
- *உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே.*
- *எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.*

***2. செய்குதம்பிப் பாவலன் குறிப்பு வரைக.***

- *'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கிய செய்குதம்பிப் பாவலர் (1874 – 1950), கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.*
- *பதினைந்து வயதிலேயே செய்யும் இயற்றும் திறன் பெற்றவர்; சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர்.*
- *1907 மார்ச் 10 ஆம் நாளில் சென்னை விக்டோரியா அரங்கத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி 'சதாவதானி' என்று பாராட்டுப்பெற்றார்.*
- *இவர் நினைவைப் போற்றும் வகையில் இடலாக்குடியில் மணிமண்டபமும் பள்ளியும் உள்ளன.*
- *இவரது அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.*

# திருவிளையாடற்புராணம் (பரஞ்சோதி முனிவர்)

***( கவிதைப்பேழை )***

**குறுவினா**

***1. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்"***

***- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?***

*கழிந்த பெரும் கேள்வியினான்: பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குசேலபாண்டியன்.*

*காதல்மிகு கேண்மையினான்: இடைக்காடனார்.*

***2. கற்றோரின் சிறப்புப் பற்றி திருவிளையாடற்புராணம் கூறும் செய்திகளை எழுதுக.***

- *தமிழ் கூறும் நல்லுலகம் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு செய்கிறது.*
- *அரசரும் புலவருக்குக் கவரி வீசுவர்.*
- *கண்ணுக்கு எட்டிய திசை வரை தெரியும் நிலங்களைப் புலவருக்குக் கொடை கொடுத்து மகிழ்வர்.*
- *இறைவனும் அறிவைப் போற்றுவதோடு, அறிவாய் நிற்கிறான்.*
- *அறிவிற் சிறந்த புலவருக்காகத் தூது சென்று, அவர்களது அறிவுப் பெருமையை உணர்த்துகிறான்.*

***3. பாண்டிய மன்னன் யாரை அவமதித்ததாக இடைக்காடனார் இறைவனிடம் கூறினார்?***

- *இடைக்காடனார் இறைவனிடம், பாண்டியன் என்னை இகழவில்லை.*
- *சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான் என்று சினத்துடன் கூறிச் சென்றார்.*

Next Generation School

## சிறுவினா

***1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.***

- *பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த குசேல பாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கினான்.*
- *இடைக்காடனார் பாடிய கவிதையை மன்னன் அவமதித்தான்.*
- *இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார்.*
- *உடனே இறைவன் தனது இலிங்க வடிவத்தை மறைத்து. கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி உமாதேவியோடு வடதிரு ஆலவாயிலில் சென்று தங்கினார்.*
- *இதை அறிந்த மன்னர் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டிப் போற்றினான்.*
- *பிறகு இடைக்காடனார் பொன் இருக்கையில் இருத்திச் சிறப்புச் செய்தான்.*

***2. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் பற்றி கூறுக.***

- *ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார். களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார்.*
- *அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர்.*
- *உறங்கிய புலவர் மோசிகீரனார்.*
- *கவரி வீசிய மன்னர் தகடூர்எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை.கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பா மழை பொழிந்தார்.*

Next Generation School

# வினா, விடை வகைகள், பொருள்கோள்

*( கற்கண்டு )*

**சான்று தருக.**

***1. கொளல் வினா.***

*அ. பணியாளனை நோக்கி, 'உனக்கு ஆடை இல்லையா? என வினவுதல்.*

***ஆ. 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?" என்று நூலகரிடம் வினவுதல்.***

*இ. 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாராதிதாசன் கவிதைகள் இருக்கிறதா? என்று வினவுதல்.*

*ஈ. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று தாய் மகனிடம் வினவுதல்.*

***2. ஏவல் வினா.***

*அ. உன் வீடு எங்கே உள்ளது? என வினவுதல்.*

*ஆ. தம்பி அண்ணனிடம் "இந்தக் கடை எங்குள்ளது?" என வினவுதல்.*

***இ. ஆசிரியர் மாணவனிடம் " இப்பாடலை மனப்பாடம் செய்துவிட்டாயா?" என்று வினவுதல்.***

*ஈ. உப்பு உளதா வணிகரே? என வினவுதல்.*

***3. ஐய வினா?***

*அ. வீட்டில் தக்காளி இல்லை, நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவுதல்.*

***ஆ. இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா? என வினவுதல்***

*இ. மாணவரிடம்,'இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று ஆசிரியர் கேட்டல்.*

*ஈ. ஆசிரியரிடம்,'இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று மாணவர் கேட்டல்.*

***4. வினா எதிர் வினாதல் விடை.***

*அ. நீ ஓடவில்லையா? என்ற வினாவிற்குக் கால் வலித்தது என விடைகூறுதல்.*

*ஆ. நீ ஊருக்குச் செல்வாயா? என்று வினவினால் செல்லேன் என விடை கூறுதல்.*

***இ. நீ ஆடுவாயா? என்ற வினாவிற்கு ஆட மாட்டேனா? என விடை கூறுதல்.***

*ஈ. இது செய்வாயா? என்ற வினவிய போது, "நீயே செய்" என்று விடை கூறுதல்.*

**5. உறுவதுகூறல் விடை**

அ. பூ தொடுப்பாயா? என்ற வினாவிற்குத் தொடுப்பேன் என விடை கூறுதல்.

ஆ. பூ தொடுப்பாயா? என்ற வினாவிற்குத் தொடுக்காமல் இருப்பேனா என விடை கூறுதல்.

**இ. பூ தொடுப்பாயா? என்ற வினாவிற்குக் கை வலிக்கும் என விடை கூறுதல்.**

ஈ. பூ தொடுப்பாயா? என்ற வினாவிற்குக் கை வலித்தது என விடை கூறுதல்.

**6. மறை விடை**

**அ. கடைக்குப் போவாயா? என்ற கேள்விக்குப் போகமாட்டேன் என மறுத்துக் கூறுதல்.**

ஆ. கடைத்தெரு எங்குள்ளது? என்ற வினாவிற்கு வலப்பக்கத்தில் உள்ளது என விடை கூறுதல்.

இ. கடைக்குப் போவாயா? என்ற வினாவிற்குப் போகாமலிருப்பேனா என விடைகூறுதல்.

ஈ. கடைக்குப் போவாயா? என்ற வினாவிற்குப் போவேன் என விடை கூறுதல்.

**7. நிரல் நிறைப் பொருள்கோள்**

அ. ஆலத்து மேல குவளை குளத்துள
வாளின் நெடிய குரங்கு.

**ஆ. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.**

இ. சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்
________________ எனற பாடல்.

ஈ. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

## நிரப்புக.

**1. வினா ______ வகைப்படும்.**

அ. நான்கு ஆ. ஐந்து **இ. ஆறு** ஈ. ஏழு

**2. விடை ______ வகைப்படும்.**

அ. ஐந்து ஆ. ஏழு **இ. எட்டு** ஈ. ஒன்பது

**3. பொருள்கோள் ______ வகைப்படும்.**

அ. ஐந்து **ஆ. எட்டு** இ. பத்து ஈ. ஆறு

***4. ஆசிரியரிடம் 'இந்தக் கவிதையின் பொருள் யாது? என்று மாணவர் கேட்பது எவ்வகை வினா?***

*அ. அறிவினா* **ஆ. அறியாவினா** *இ. ஐயவினா* *ஈ. கொளல் வினா*

***5. 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல்***

*அ. அறிவினா* *ஆ. அறியாவினா* **இ. கொளல் வினா** *ஈ. கொடைவினா*

***6. 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசன் கவிதைகல் இருக்கிறதா?'***

*அ. கொளல் வினா* **ஆ. கொடைவினா** *இ. அறியாவினா* *ஈ. ஐயவினா*

***7. 'நீ கடைக்குச் செல்கிறாயா?' என அக்கா தன் தம்பியிடம் கேட்பது***

*அ. கொளல் வினா* *ஆ. கொடைவினா* **இ. ஏவல்வினா** *ஈ. ஐயவினா*

***8. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்ந்ததைக் கேட்பது***

**அ. உற்றது உரைத்தல் விடை** *ஆ. உறுவது கூறல் விடை*

*இ. இனமொழி விடை* *ஈ. நேர்விடை*

***9. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுதல்***

*அ. உற்றது உரைத்தல் விடை* **ஆ. உறுவது கூறல் விடை**

*இ. வினா எதிர் வினாதல் விடை* *ஈ. மறை விடை*

***10. 'என்னுடன் ஊருக்கு வருவாயா?' என்று வினவியபோது 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது***

*அ. ஏவல் விடை* **ஆ. வினா எதிர் வினாதல் விடை**

*இ. உற்றது உரைத்தல் விடை* *ஈ. இனமொழி விடை*

***11. செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்கள் அல்லது வினைச்சொற்களின் வரிசைக்கு ஏற்ப பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல்***

**அ. முறை நிரல்நிறைப் பொருள்கோள்** *ஆ. எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்*

*இ. கொண்டு கூட்டுப் பொருள்கோள்* *ஈ. ஆற்றுநீர்ப் பொருள்கோள்*

***12. "விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு***
***நூல் கற்றாரோடு ஏனை யவர்" – என்ற குறளில் அமைந்திருப்பது எவ்வகைப் பொருள்கோள்?***

*அ. ஆற்றுநீர் பொருள்கோள்* *ஆ. முறைநிரல் நிறைப் பொருள்கோள்*

**இ. எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்** *ஈ. கொண்டுகூட்டுப் பொருள்கோள்*

*13.* **ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது எவ்வகைப் பொருள்கோளாகும்?**

அ. ஆற்றுநீர் பொருள்கோள் ஆ. முறை நிரல்நிறைப் பொருள்கோள்

இ. எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் **ஈ. கொண்டுகூட்டுப் பொருள்கோள்**

*14.* **'இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?' என வினவுதல்_____ வினா.**

அ. ஏவல் வினா **ஆ. ஐய வினா** இ. அறிவினா ஈ. அறியாவினா

*15.* **மாணவரிடம்,' இந்தக் கவிதையின் பொருள் யாது?" என்று ஆசிரியர் கேட்டல்____ வினா.**

அ. ஐய வினா **ஆ. அறிவினா** இ. ஏவல் வினா ஈ. அறியாவினா

*16.* **தான் ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது _____ வினா.**

அ. ஏவல் வினா **ஆ. கொளல் வினா** இ. ஐய வினா ஈ. கொடை வினா

*17.* **"இது செய்வாயா?" என்று வினவியபோது "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது _____வினா.**

அ. சுட்டு விடை ஆ. மறை விடை இ. நேர் விடை **ஈ. ஏவல் விடை**

*18.* **"கடைக்குப் போவாயா?" என்ற கேள்விக்குப் 'போவேன்' என்று கூறுதல்____ விடை.**

அ. உற்றது உரைத்தல் **ஆ. நேர் விடை**

இ. உறுவது கூறல் ஈ. சுட்டு விடை

*19.* **"உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது ____ விடை.**

அ. உறுவது கூறல் விடை ஆ. உற்றது உரைத்தல் விடை

**இ. இனமொழி விடை** ஈ. வினா எதிர் வினாதல் விடை

*20.* **ஒரு செய்யுளில் சொற்கள் முறைபிறழாமல் வரிசையாக அமைந்து வருவது ____ பொருள்கோள் ஆகும்.**

அ. ஆற்றுநீர்ப் பொருள்கோள் **ஆ. நிரல் நிறைப் பொருள்கோள்**

இ. கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஈ. மொழிமாற்றுப் பொருள்கோள்

Next Generation School

**கூறியவாறு செய்க.**

*1. **வேலூருக்கு வழி எது?(சுட்டு விடையாக மாறுக)***

அ. எனக்குத் தெரியாது என்று கூறுதல்

ஆ. கூறாமலிருப்பேனா? என்று கூறுதல்.

**இ. இது அல்லது அது என்று கூறுதல்**

ஈ. மதுரைக்கு வழி தெரியும் என்று கூறுதல்

*2. **இது செய்வாயா? (வினா எதிர் வினாதல் விடையாக மாற்றுக)***

அ. செய்யமாட்டேன் | ஆ. செய்வேன்

**இ. செய்யாமலிருப்பேனா** | ஈ. நீயே செய்.

*3. **திருக்குறள் புத்தகங்கள் இருக்கின்றன. (கொளல் வினாவாக்குக)***

அ. திருக்குறள் புத்தகம் வேண்டுமா?

ஆ. திருக்குறள் புத்தகம் எங்கே இருக்கிறது?

**இ. திருக்குறள் புத்தகம் இருக்கிறதா?**

ஈ. திருக்குறள் புத்தகம் யாரிடம் இருக்கிறது?

*4. **நீ ஏன் விளையாடவில்லை? (உற்றது உரைத்தல் விடையாக்குக)***

அ. கால் வலிக்கும் | **ஆ. கால் வலிக்கிறது**

இ. விளையாடாமல் இருப்பேனா? | ஈ. இவற்றில் எதுவும் இல்லை.

*5. **நான் இப்போதுதான் உண்டேன்" என்று கந்தன் கூறினான்.(இத்தொடருக்கேற்ற ஏவல் வினாவமைக்க )***

அ. கந்தன் என்ன செய்தான்? | ஆ. கந்தன் உண்டானா?

**இ. கந்தா உண்டாயா?** | ஈ. கந்தன் எப்போது உண்டான்?

*6. **படித்தாயா? (உற்றது உரைத்தல் விடை எழுதுக)***

அ. தலை வலிக்கும் | ஆ. எழுதினேன் | இ. படிக்கவில்லை | **ஈ. தலை வலித்தது**

Next Generation School